28.04.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## மே 16-இல் கொடைக்கானல் மலர் கண்காட்சி

கோடை விழாவை முன்னிட்டு, மே 16ஆம் தேதி கொடைக்காலில் மலர் கண்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொடைக்கானலில் கோடைவிழா நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு, மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தலைமை வகித்தார். கொடைக்கானல் வன அலுவலர் வெங்கடேசன், நகர்மன்றத் தலைவர் ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.அப்போது ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தெரிவித்தது:

கொடைக்கானலில் மே 16ஆம் தேதி மலர் கண்காட்சி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் குறைந்த விலையில் உணவு வகைகள் கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொடைக்கானல் - பழனி சாலை மற்றும் கொடைக்கானல் - வத்தலகுண்டு சாலைகளையும் சீரமைப்பதற்கு நெடுஞ்சாலைத்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கோடை விழாவையொட்டி கால்பந்து, கைப்பந்து, மீன்பிடிக்கும் போட்டி, மாரத்தான், கிரிக்கெட் போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்திடவும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கூடுதல் பேருந்துகளை இயக்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.மு.நாகேந்திரன், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மு.ச.பாண்டியராஜன், கொடைக்கானல் கோட்டாட்சியர் என்.சுரேஷ், உதவி இயக்குநர்(தோட்டக்கலைத்துறை) பாண்டியன், சுற்றுலா அலுவலர் குணசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பரளிக்காடு**

காரமடையை அடுத்த பில்லூர் அணை, பரளிக்காடு பகுதியில் வனத்துறை சார்பில் நடத்தப்படும் சூழல் சுற்றுலா இப்பகுதிக்கு வருவோரை பெரிதும் கவருவதாக உள்ளது.காரமடையிலிருந்து 35 கி.மீ தொலைவில் இந்தச் சுற்றுலா தலம் அமைந்துள்ளது. தற்போது கோடை சீசன் துவங்கியுள்ள நிலையில், பல்வேறு பகுதிகளிலிருந்து இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேட்டுப்பாளையத்தை அடுத்த காரமடை அருகே பில்லூர் அணை வனப் பகுதிகளில் 30-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஆதிவாசி மற்றும் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர்.இப்பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், அவர்களை சுய தொழிலில் ஈடுபடுத்தவும் வனத்துறை சார்பில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் பில்லூர் அணைப் பகுதி அருகே பரளிக்காடு, பவானி ஆற்றுப் பகுதியில் சூழல் சுற்றுலா தலம் துவங்கப்பட்டது. வனத் துறையினரிடம் முன்பதிவு செய்த பின்னரே இப்பகுதிக்குச் செல்ல முடியும்.பழங்குடி மக்கள் பங்கேற்புடன் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் இந்த சூழல் சுற்றுலாத் தலம் செயல்படுகிறது. பவானி ஆற்றில் அழைத்துச் செல்லப்படும் பரிசல் பயணத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் ரம்மியமான காட்சியைக் காண முடிகிறது. பயணத்தின்போது வனம் குறித்து பழங்குடியினர் அளிக்கும் தகவல்கள் பயனுள்ளதாக உள்ளன.

சுகமான பரிசல் பயணம் முடிந்தவுடன் பழங்குடியின மக்களால் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய உணவான ராகி, கம்பங்களி, பசலைக் கீரையுடன் சப்பாத்தி, சைவ பிரியாணி, நாட்டுக் கோழிக் குழம்புடன் மதிய உணவு வழங்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து, வனத் துறையினரின் பாதுகாப்புடன் அருகிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மலையேற்றத்திற்கும் சுற்றுலாப் பயணிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதில் யானை, மான், காட்டெருமை உள்ளிட்ட பல்வேறு வனவிலங்குகளைக் காணும் வாய்ப்பு கிடைக்கும்.

இதையடுத்து, பவானி ஆற்றில் குளிப்பது, சுற்றுலாப் பயணிகளுக்கு இனிமையான அனுபவத்தை தருவதாக உள்ளது. அரசு விடுமுறை

நாள்களிலும், வார விடுமுறை நாள்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படும் இந்தச் சூழல் சுற்றுலாவில் பங்கேற்க நபர் ஒருவருக்கு ரூ. 400 வசூலிக்கப்படுகிறது.இவ்வாறு வசூலிக்கப்படும் நிதி முழுவதும் அப்பகுதியில் உள்ள ஆதிவாசி மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் கல்வி மேம்பாட்டுக்காக வனத் துறை மூலமாகச் செலவிடப்படுகிறது.

**தமிழகம், புதுச்சேரியில் இன்று இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கோடை காலம் தொடங்கிய நிலையில், வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி, காற்றழுத்தத் தாழ்வு நிலை ஆகியவற்றின் காரணமாக கடந்த சில நாள்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது.

இதனால் வெயிலின் தாக்கம் சற்று குறைந்து காணப்பட்டது. அந்தமான் கடல் - வங்கக் கடல் ஒட்டிய பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக, பல இடங்களில் பலத்த மழை பெய்து வந்தது. தற்போது அந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்தது. இந்த நிலையில், வெப்பச் சலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை ஓரிரு இடங்களில் மட்டுமே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.திங்கள்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்துள்ளது. இவற்றில் தேனி மாவட்டம் போடி நாயக்கனூரில் அதிகபட்சமாக 70 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.அதேபோல சிவகிரி, பொள்ளாச்சி, சேந்தமங்கலத்தில் தலா 50 மி.மீட்டரும், வால்பாறை, உதகமண்டலம் ஆகிய இடங்களில் தலா 40 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழைபெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திங்கள்கிழமை காலை நொடிக்கு 2,089 கன அடியாக அதிகரித்தது.கடந்த சில நாள்களாக காவிரியின்

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால், ஞாயிற்றுக்கிழமை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 629 கன அடியாக இருந்தது, திங்கள்கிழமை காலை நொடிக்கு 2,089 கன அடியாக அதிகரித்தது.திங்கள்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 69.67 அடியாகவும், அணையின் நீர் இருப்பு 32.41 டி.எம்.சி.யாக இருந்தது.

**விளை பொருள்களுக்கு ஆதார விலை: விவசாயிகள் கோரிக்கை**

விளை பொருள்களின் விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த, ஆதார விலை நிர்ணயம் செய்து, அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என மாவட்ட விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து மாவட்டத் தலைவர் கு.வெள்ளைச்சாமி, மாவட்ட ஆட்சியரிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பது: கடும் வறட்சி, இடுபொருள்கள் விலை ஏற்றம் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வு போன்ற பாதிப்புகளையும் கடந்து சாகுபடி செய்யப்படும் காய்கறி, கனிகள், மலர் மற்றும் சிறுதானிய பயிர்களுக்கு தகுந்த விலை கிடைக்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவும் வகையில், விளை பொருள்களுக்கு ஆதார விலையை நிர்ணயம் செய்து, மாவட்ட நிர்வாகம், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்யும் வியாபாரிகள், அதிக விலைக்கு பொதுமக்களிடம் விற்று லாபம் அடைகின்றனர். வியாபாரிகளின் நடவடிக்கையால், விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக்கப்படுவதை தடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**ஜூன் 21-இல் கோவையில் சர்வதேச காற்றாலை மின் சக்தி கருத்தரங்கு**

இந்திய காற்றாலை மின் சக்தி சங்கத்தின் 4-ஆவது பன்னாட்டு காற்றாலை மின் சக்தி கண்காட்சி, கருத்தரங்கு கோவையில் ஜுன் மாதம் நடைபெறுகிறது. இதுகுறித்து, இந்திய காற்றாலை மின் சக்தி சங்கத் தலைவர் கே.கஸ்தூரி ரங்கையன் கோவையில் செய்தியாளர்களிடம் திங்கள்கிழமை கூறியது: இந்திய காற்றாலை மின் சக்தி சங்கம் சுமார் 1,300 முதலீட்டாளர்கள், மின் உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக்

கொண்டுள்ளது. தமிழகத்தில் காற்றாலைகள் மூலமாக சுமார் 7,500 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் மின் சக்தி தேவைக்கு உதவும் வகையில், காற்றாலை மின் உற்பத்தியில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து, உற்பத்தியை அதிகரிக்கவும், இந்தத் துறையில் மேலும் முதலீடுகளை ஈர்க்கவும் எங்களது சங்கத்தின் சார்பில் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி, இந்த ஆண்டு 4-ஆவது சர்வதேசக் காற்று மின் சக்தி கண்காட்சி, கருத்தரங்கு ஜூன் 21 முதல் 23-ஆம் தேதி வரை கொடிசியா வளாகத்தில் நடைபெறவுள்ளது. இதில், காற்றாலை மின் சக்தி உற்பத்தியாளர்கள், டர்பைன் தயாரிப்பாளர்கள், கியர் பாக்ஸ், டவர்கள், டர்பைன் பிளேடுகள் தயாரிப்பாளர்கள், காற்று மின் சக்தி கட்டுப்பாடு அமைப்பு, கண்காணிப்பு, போக்குவரத்து ஏற்பாட்டாளர்கள், ஆலோசகர்கள், காற்று விசை குறித்து தகவல் வழங்கும் நிறுவனங்கள், காற்றாலை பராமரிப்பு நிறுவனங்கள் பங்கேற்கின்றன. உலகிலேயே அதிகளவில் காற்று மின் சக்தி உற்பத்தி செய்யும் 5 நாடுகளில்ஒன்றாகஇந்தியா இருக்கும் நிலையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில்உள்ளபல்வேறு பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டால் இந்தத் துறையில் இந்தியா மேலும் வளர்ச்சி அடையும். தமிழகத்தின்மொத்தமின்உற்பத்தியில் காற்றாலைகளின் பங்கு 14 சதவீதமாக உள்ளது. காற்றாலை மூலமாக ஒரு யூனிட் மின் உற்பத்தி செய்ய ரூ. 3.12 மட்டுமே செலவாகிறது. இதர முறைகளில் மின் உற்பத்தி செய்வதைக் காட்டிலும் இது மிகவும் குறைவு என்பதால்மத்திய,மாநிலஅரசுகள்தேவையற்றகட்டுப்பாடுகளைத்தளர்த்தி, காற்றாலைமின்சாரத்தயாரிப்பாளர்களுக்குஊக்கமளிக்கவேண்டும்என்றார்.கண்காட்சி,கருத்தரங்கின்தலைவர்எம்.வி.ரமேஷ்பாபுஉடனிருந்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## நிலமற்ற விவசாயிகள் ஒருங்கிணைந்தால் கடன் தாராளம்! கூட்டுறவுத் துறை மூலம் பயிர், சிறு வணிகக்கடன்



மதுரை : மதுரை மாவட்டத்தில் நிலமற்ற விவசாயிகள் ஒருங்கிணைந்து குத்தகை மூலம் விவசாயம் செய்தால், கூட்டுறவுத்துறை மூலம் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது.ஒரே கிராமத்தைச் சேர்ந்த நிலமற்ற விவசாயிகள் 10 பேர் ஒருங்கிணைந்து கூட்டுப் பொறுப்பு குழுவை உருவாக்க வேண்டும். அப்பகுதியிலேயே நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்தால் அதிகபட்சமாக ரூ.3 லட்சம் வரை பயிர்க்கடன் தரப்படுகிறது. ஏழு சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது. கடனை குறிப்பிட்ட கால இடைவெளியில் செலுத்தினால், வட்டி தள்ளுபடி செய்யப்படுகிறது. 10 பேரும் தங்களுக்குள்ளேயே ஜாமின் கொடுப்பது அவசியம். நகர்ப்பகுதியில் ஒரே பகுதியைச் சேர்ந்த 10 பேர் ஒன்று சேர்ந்து அதிகபட்சமாக ரூ.ஒரு லட்சம் வரை சிறு வணிகக்கடன் பெறலாம். இதற்கு 13 சதவீத வட்டி.கடன்கள் குறித்து மண்டல இணைப்பதிவாளர் வெங்கடேசன் கூறியதாவது: 2014 - 15ல் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 227 குழுக்களுக்கு ரூ.5.29 கோடி கடனும்,

உசிலம்பட்டி நகர் கூட்டுறவு வங்கி மூலம் 35 குழுக்களுக்கு ரூ.14 லட்சம் கடன் வழங்கியுள்ளோம். நிலமற்ற விவசாயிகள், இளைஞர்கள் இத்திட்டத்தை பயன்படுத்தி கடன்பெறலாம். இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளோம், என்றார்.

**பொள்ளாச்சியில் கோடை மழை தாண்டவம்! இரவு முழுவதும் கொட்டித்தீர்த்தது**

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில் கொட்டித்தீர்த்த மழையால், குடியிருப்பு பகுதி மற்றும் பாலங்களில் தேங்கிய நீரை அப்புறப்படுத்தும் பணியில் நகராட்சி அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம் முக்கியத்தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில், தென்னை மற்றும் மா உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.மற்ற பயிர்களை விட தென்னை சாகுபடி அதிகளவு உள்ளது. போதுமான நீர் வசதி கிடைத்து வந்ததால், சாகுபடி செய்யப்படும் பயிர்கள் மற்ற பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.இந்நிலையில், கோடைக்காலம் துவங்கியதால் வெயிலின் தாக்கமும் அதிகம் காணப்பட்டது. பிப்., மார்ச் மாதங்களில், வெயில் சுட்டெரித்ததால், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வந்தனர்.மேலும், விவசாயிகளும் கோடைமழை பெய்தால் மானவாரி சாகுபடி செய்யலாம் என எதிர்பார்ப்பில் காத்திருந்தனர். செடிகளுக்கு போதிய தண்ணீர் கிடைக்காததால் வாடியது.

இந்நிலையில், பொள்ளாச்சி மற்றும் சுற்றுப்பகுதியில் கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. காலையில் சுட்டெரிக்கும் வெயிலும்; மாலையில் குளிர்ந்த காற்றுடன் சாரல் மழையும்; இரவு நேரத்தில் பலத்த மழையும் பெய்து வருகிறது. இதனால் வெயிலின் தாக்கம் குறைந்து குளிர்ந்த பகுதியாக பொள்ளாச்சி மாறியுள்ளது. நேற்றுமுன்தினம் காலை முதல் மேக மூட்டத்துடன் காணப்பட்ட நிலையில், மதியம், 3:30 மணி முதல் இடைவிடாமல் மழை தொடர்ந்து பெய்தது. தொடர்ந்து இரவு முழுவதும் பெய்த மழையால் தாழ்வான பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்தது. அண்ணா காலனி, மீன்கரை ரோடு, சுந்தரம் லே-அவுட், மரப்பேட்டை பள்ளம், கோட்டூர் ரோடு, ராம்நகர் பகுதி, கண்ணப்ப நகர் உள்ளிட்ட தாழ்வான

பகுதிகளில் மழை நீர் புகுந்ததால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

மீன்கரை ரோடு பாலத்தில் தண்ணீர் தேங்கியதால் அவ்வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது; யாரும் சென்று வர முடியாத சூழல் காணப்பட்டது.ஆய்வு: மழையால் பாதிக்கப்பட்ட நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு நகராட்சித்தலைவர் கிருஷ்ணகுமார், கமிஷனர் சுந்தராம்பாள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது பொதுமக்கள் தடுப்பு சுவர் அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதற்கு நகராட்சி தலைவர்,நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். நகராட்சி தலைவர் கூறுகையில்," நகராட்சி குடியிருப்பு பகுதியையொட்டியுள்ள கழிவுநீர் கால்வாய்கள் முன்கூட்டியே தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஓரளவு பாதிப்புகள் குறைந்தள்ளது. எனினும் குடியிருப்பு பகுதிகள் மற்றும் பாலத்தின் கீழ் தேங்கியுள்ள நீரை அகற்ற நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது," என்றார்.இதுபோன்று மரப்பேட்டை பள்ளம் பகுதியில் பொள்ளாச்சி எம்.எல்.ஏ., முத்துக்கருப்பண்ணசாமி ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அங்கிருந்த மக்கள்,'தடுப்பு சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என கோரிக்கை விடுத்தனர். இதற்கு எம்.எல்.ஏ.,' தடுப்பு சுவர் அமைத்து தருவதாக,' உறுதியளித்தார். ஆய்வின் போது, கவுன்சிலர் குருசாமி மற்றும் அ.தி.மு.க.,வைச் சேர்ந்த ராஜ்கபூர், ரமேஷ் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர். பணிகள் துரிதம்: மீன்கரை ரோட்டில் ரயில்வே பாலத்தின் கீழ் தண்ணீர் தேங்கி நின்றதால் வாகனங்கள் போவதில் இடையூறு ஏற்பட்டது. இதனையடுத்து, அங்கு தேங்கியிருந்த தண்ணீர் அப்புறப்படுத்தப்பட்டு, போக்குவரத்து சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.இது போன்று குடியிருப்பு பகுதிகள் மற்றும் நகரப்பகுதியில் தேங்கியிருக்கும் மழை நீரை அகற்றும் பணியை மேற்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீர்வு தான் என்ன?

மழைக்காலங்களில் தாழ்வான பகுதிக்கு இதுபோன்று தண்ணீர் தேங்குவதும்; குடியிருப்புகளுக்குள் மழை நீர் புகுவதும் அவ்வப்போது நடந்து வருகிறது. இதனை தடுக்க நிரந்தர தீர்வு காண வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு.மேலும், தடுப்பு சுவர் அமைக்கவோ அல்லது இப்பகுதியில் உள்ள மக்களுக்கு குடிசை மாற்று

வாரியம் மூலமாக மாற்று இடத்தில் வீடுகள் அமைத்து தந்தால் மட்டுமே நிரந்தர தீர்வு காண முடியும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும்.

பொள்ளாச்சியில் 124 மி.மீ., மழை சோலையாறு -10, பரம்பிக்குளம்-38, ஆழியாறு-8, அமராவதி- 22, பொள்ளாச்சி-124, வால்பாறை-18, வேட்டைக்காரன்புதூர்-29, மணக்கடவு-53.8, நல்லூர்-14, நவமலை-7, சர்க்கார்பதி-14, தூணக்கடவு-46, பெருவாரிப்பள்ளம்-67, உப்பாறு- 4, காடம்பாறை-4, அப்பர் ஆழியாறு-9, தாராபுரம்- 3 என மழையளவு பதிவாகியது.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

மேட்டூர்: நீர்ப்பிடிப்பு பகுதிகளில், தீவிரமடைந்த கோடை மழையால், மேட்டூர் அணை நீர்வரத்து, வினாடிக்கு, 2,089 கனஅடியாக அதிகரித்தது. கடந்த 26ம் தேதி வரை, காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் நீடித்த, கடும் வறட்சியால், மேட்டூர் அணை நீர்வரத்து, வினாடிக்கு, 450 கனஅடியாக சரிந்தது. அதன்பின், தமிழக எல்லையிலுள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில், கோடை மழை தீவிரமடைந்ததால், மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று முன்தினம், 629 கனஅடியாகவும், நேற்று, 2,089 கனஅடியாகவும் அதிகரித்தது. எனினும், அணையில் இருந்து வினாடிக்கு, 6,000 கனஅடி நீர் வெளியேற்றுவதால், நேற்று முன்தினம், 70.020 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 69.670 அடியாக சரிந்தது.

**கோடையில் நிரம்பி வழியும் சோத்துப்பாறை அணை**




பெரியகுளம்: தேனி மாவட்டம், பெரியகுளம் அருகேயுள்ள சோத்துப்பாறை அணை நீர்பிடிப்பு பகுதியில் தொடர்மழையால் ஏழு ஆண்டுகளுக்கு பிறகு கோடையில் அணைநிரம்பி வழிகிறது.

மதகு பழுதால் திறக்கப்படாத நிலையிலும் நீர் வெளியேறுகிறது. கடந்த ஏப்ரல் 20 ல் அணையின் நீர்மட்டம் நூறு அடியை எட்டியது. தொடர்ந்து நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து ஏப்ரல் 26 ல் 124 அடியாக இருந்தது. நேற்று மீதமுள்ள இரண்டு அடியை கடந்து அணை நிரம்பி வழிகிறது. அணையின் மொத்த உயரம் 126 அடி. திறக்கப்படாத மதகுபகுதிகளிலும் பழுதால் தண்ணீர் வெளியேறுகிறது. அணைக்கு வினாடிக்கு 40 கனஅடி நீர் வந்துகொண்டுள்ளது. நீர்பிடிப்பு பகுதியில் 6 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்தாண்டு ஏப்ரல் 28ல் அணையின் நீர்மட்டம் 60.18 அடியாக இருந்தது. ஏழு ஆண்டுகளுக்கு பிறகு நேற்று கோடையில் மூன்றாம் முறையாக இந்த ஆண்டு அணை நிரம்பியுள்ளது.

**பயன்பெறும் பகுதிகள்:**

சோத்துப்பாணை அணை நிரம்பியதால் பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள ஆயிரத்து 825 ஏக்கர் பரப்பளவில் உள்ள விளைநிலங்களும், புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதியில் உள்ள ஆயிரத்து 40 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலங்களும் பயன்பெறும். நூற்றுக்கணக்கான கிணறுகளின் நீர் மட்டம் உயரும். தற்போது பெரியகுளம் பகுதிக்கு குடிநீருக்கு மட்டும் மூன்று கனஅடிநீர் அணையிலிருந்து வெளியேற்றப்படுகிறது. அணை நிறைந்துள்ள விபரத்தை பொதுப்பணித்துறையினர் தமிழக அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அரசு அறிவிப்பு வெளியானவுடன் அணையில் நீர் திறக்கப்படும். அணை நிரம்பியதால் நெல், வாழை, கரும்பு உட்பட பலவகையான பயிர்கள் விவசாயம் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## குழந்தை எடை குறைவை தடுக்க முட்டை அவசியம்: நிபுணர் தகவல்

திண்டுக்கல்: "எடை குறைவுள்ள குழந்தை பிறப்பை தடுக்க கர்ப்பிணிகளுக்கு முட்டை அவசியம்," என கால்நடை மருத்துவ பல்கலை ஆராய்ச்சி மையத் தலைவர் பீர்முகமது தெரிவித்தார்.

திண்டுக்கல் ஆராய்ச்சி மையத்தில் நடந்த விவசாயிகளுக்கான கருத்தரங்கில் அவர் பேசியதாவது: இந்தியாவில் 3.6 சதவீத முட்டைகள்

உற்பத்தியாகின்றன. இங்கு முட்டை உற்பத்திக்கான செலவு குறைவு. நாமக்கல்லில் ஒரு நாளில் 2.10 கோடி முட்டைகள் உற்பத்தியாகின்றன. இதில் 50 லட்சம் முட்டைகள் வெளிநாட்டிற்கும், 50 லட்சம் கேரளாவுக்கும் அனுப்பப்படுகின்றன. தமிழகத்தில் வயதுவந்தோர் ஓராண்டிற்கு 100 முட்டைகள் உட்கொள்கின்றனர். ஒருவர் சராசரியாக வாரத்திற்கு 5 முட்டைகள் உண்ணலாம். வெண் கருவில் புரதச்சத்து மிகுதியாக இருக்கும். இது உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. முட்டையில் ஆறில் ஒரு பங்கு புரதத்தால் ஆனது. மஞ்சள் கருவில் 14 சதவீதம், வெண்கருவில் 10 சதவீதம் புரதம் இருக்கும். இதில் அமினோ அமிலங்கள் சரிவிகிதத்தில் உள்ளன. கர்ப்பிணிகள் முட்டைகள் உட்கொண்டால் எடை குறைவானகுழந்தைகள் பிறப்பதை தவிர்க்கலாம். தானியம், இறைச்சி, பாலை விட முட்டையில் உள்ள புரதம் தரத்தில் உயர்ந்தது. மஞ்சள்கரு கொழுப்புச்சத்து நிறைந்தது. ஒரு முட்டையில் 212 மி.கி., கொலஸ்ட்ரால் இருக்கும். பாஸ்பரஸ், இரும்பு, பாஸ்போலிபிட் போன்ற கொழுப்பு அமிலங்கள் உள்ளன. அதிக கொழுப்பு சத்து உடையோர் வாரம் இருமுறை முட்டை உட்கொள்ளலாம், என்றார்.

**கரும்புக்கு கட்டுபடியான விலை: விவசாயிகள் எதிர்பார்ப்பு**

மதுரை: கரும்புக்கு கட்டுபடியான விலை வழங்கவும், சர்க்கரை ஆலைகள் பாக்கி ரூ.470 கோடியை பெற்று கொடுக்கவும் கோரி அடுத்தடுத்து போராட்டங்களில் ஈடுபட தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.மதுரையில் சங்க மாநிலத் தலைவர் பழனிச்சாமி கூறியதாவது: கரும்பு விவசாயிகளுக்கு அரசே நேரடியாக மானியம் வழங்க வேண்டும் என சர்க்கரை ஆலைகள் சங்கம் அறிவித்துள்ளது. கரும்பு கட்டுப்பாடு உத்தரவு 1966ன்படி கரும்புக்கான சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையை மத்திய அரசு அறிவிக்கும் போது ஐந்து அம்சங்களை கணக்கில் எடுக்கும். சர்க்கரை விற்பனை விலை மூலம் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை விவசாயிகளுக்கு அளிக்க பார்கவா குழு பரிந்துரைத்தது. சர்க்கரை ஆலைகள் மாநில அரசின் பரிந்துரை விலையை அளிக்க மறுத்ததால், உச்சநீதிமன்றத்தில் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு, மாநில அரசு பரிந்துரை விலை அளிக்கலாம் என உத்தரவிட்டது. சர்க்கரை துறையை சீர்திருத்தம் செய்ய நியமிக்கப்பட்ட

தோரட் குழு அறிக்கை மத்திய அரசுக்கு கிடைத்த போதும் அமல்படுத்தவில்லை. ரங்கராஜன் கமிட்டி பரிந்துரைப்படி விலையை தீர்மானிப்பது விவசாயிகளை கடன்காரர்களாக்கி விடும். சர்க்கரை உற்பத்தி அதிகம் இருப்பதால் இருப்பு ஏற்படுவதாக தகவல் வெளியிடப்படுகிறது. சர்க்கரை இருப்பு ஏற்படுவது புதிதல்ல. சர்க்கரை இருப்பை காட்டி விவசாயிகள் தலையில் சுமையை ஏற்ற கூடாது. மேலும் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பாக்கி ரூ.470 கோடியுள்ளது. உடனடியாக அதை வழங்க வேண்டும். இதை வலிறுத்தி மதுரை, தஞ்சை, ஈரோடு, விழுப்புரத்தில் மே 15 முதல் அடுத்தடுத்து போராட்டங்கள் நடத்தப்படும் என்றார்.

**மக்காசோளத்தை இருப்பு வைத்து விற்கலாம் வேளாண் வணிக துணை இயக்குநர் அறிவுரை**

விழுப்புரம்: விவசாயிகள் அறுவடை செய்த மக்காசோளத்தை இருப்பு வைத்து விற்பனை செய்தால் கூடுதல் லாபம் பெறலாம் என வேளாண்துறை வணிக துணை இயக்குநர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் வேளாண் வணிகதுணை இயக்குநர் ஞானவேல் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மக்காசோளம் பயிரிடும் பரப்பானது கடந்தாண்டை விட 27 சதவீதம் அதிகரித்து இந்தாண்டு 1.74 லட்சம் எக்டராக உள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் கள் ளக்குறிச்சி, சங்கராபுரம், தியாகதுருகம், சின்னசேலம் ஆகிய பகுதிகள் மக்காசோளம் பயிரிடும் முக்கிய இடங்களாக உள்ளது. தமிழ்நாட்டில் இதற்கான வரத்து துவங்கியுள்ள நிலையில் மக்காசோளம் தற்போது குவிண்டாலுக்கு 1330 ரூபாய் முதல் 1360 வரை விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகங்களில் இயங்கி வரும் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளின் படி தரமான மக்காசோளத்தை இருப்பு வைத்து விற்பனை செய்யும்பட்சத்தில், வரும் ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் குவிண்டாலுக்கு 1420 ரூபாய் முதல் 1450 வரை விலை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அறுவடை செய்த மக்காசோளத்தை சேமித்து வைத்து வரும் ஜூன், ஜூலை மாதங்களில் விற்பனை செய்து கூடுதல் லாபம் பெறலாம்.

**கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு எள், மக்காசோளம் வரத்து அதிகரிப்பு**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு எள் மற்றும் மக்காசோளம் வரத்து அதிகரித்தது. கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு, பல்வேறு பகுதியைச் சேர்ந்த 682 விவசாயிகள் 1,000 எள் மூட்டைகளை நேற்று விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சமாக ரூ.5,616, குறைந்தபட்சமாக ரூ.4,409 என விலை நிர்ணயிக்கப்பட்டது. மொத்த எள் மூட்டைகளும், 52 லட்சம் ரூபாய்க்கு, விற்பனை செய்யப்பட்டன. இதேபோல் 23 விவசாயிகள் 200 மூட்டை மக்காசோளம் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சமாக ரூ.1,339, குறைந்தபட்சமாக ரூ.1,286 விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்த மக்காச்சோள மூட்டைகள் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன. மே<லும் 13 விவசாயிகள் 30 கம்பு மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சமாக ரூ.1,659, குறைந்தபட்சமாக ரூ.1,293 என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்த கம்பு மூட்டைகள் 45 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன. இதன்படி கள்ளக்குறிச் மார்க்கெட் கமிட்டியில் நேற்று 55 லட்சம் ரூபாய் மதிப்பிலான விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டது.

**கோடை மழையால் வெப்பம் குறைந்தது**

தியாகதுருகம்: கோடை மழையால் கள்ளக்குறிச்சி பகுதியில் வெயிலில் தாக்கம் குறைந்ததால் மக்கள் நிம்மதியடைந்தனர். கோடைகாலத்தின் துவக்கத்திலேயே கடந்த 10 நாட்களாக அவ்வப்போது விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. நீர்நிலைகளில் பள்ளமான இடத்தில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. கடந்த 24ம் தேதி இரவு கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த பலத்த மழை யால் மண்ணின் ஈரத்தன்மை அதிகரித்துள்ளது. நீர் இன்றி வாடிய நிலையில் இருந்து கரும்பு பயிர்கள் மலர்ச்சிடன் பசுமையாக காட்சியளிக்கிறது. பகல் நேரத்தில் மேகமூட்டம் இருப்பதால் வெயிலின் தாக்கம் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் கோடை வெப்பத்தில் இருந்து தற்காலிக விடுதலை கிடைத்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இரவு நேரத்தில் குளிர்ந்த காற்று வீசுவதால் புழுக்கம் குறைந்துள்ளது. மழை தொடர வாய்ப்புள்ளதாக வானிலை

மையம் தெரிவித்துள்ளதால் இதே சூழல் தொடர வாய்ப்புள்ளதால் வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து மக்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

**2,513 பருத்தி மூட்டை ரூ.30 லட்சத்துக்கு ஏலம்**

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில், 2,767 மூட்டை பருத்தி, 35 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 35க்கும் மேற்பட்ட விவசாயிகள், 2,513 மூட்டை பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,860, குறைந்த பட்சம், 4,179 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம, 4,312, குறைந்த பட்சம், 3,806 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம் 2,767 பருத்தி மூட்டை, 30 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர், கொங்ணாபுரம் ஆகிய பகுதியை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று பருத்தி மூட்டைகளை ஏலம் எடுத்தனர்.

**தொடரும் கோடை மழை; விவசாயிகள் பெருமகிழ்ச்சி**

கூடலூர் : கூடலூாரில் தொடரும் கோடை மழையால், தொரப்பள்ளி 'குணில்' ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கூடலூர், முதுமலை புலிகள் காப்பக பகுதிகளில் மழை பெய்யாததால், சில மாதங்களாக வறட்சி ஏற்பட்டது. வன விலங்குகள், உணவு தண்ணீருக்காக இடம் பெயர்ந்தன. பொதுமக்களும் தண்ணீருக்கு சிரமப்படும் சூழல் உருவானது.இந்நிலையில், சில வாரங்களாக பெய்து வரும், கோடை மழையால் வனப்பகுதி பசுமைக்கு மாறி, நீர் நிலைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

வன விலங்குகளுக்கு உணவு, தண்ணீர் தட்டுப்பாடு நீங்கியதுடன், பொதுமக்களும் நிம்மதி அடைந்துள்ளனர்.கூடலூர் தொரப்பள்ளி, மண்வயல், முதுமலை கார்குடி பகுதிகளில் சில நாட்களாக மாலையில்

பெய்த கோடை மழையால், தொரப்பள்ளி 'குணில் 'ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. கோடையில் ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளதால், அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**'மருத்துவ குணம் வாய்ந்த நாற்றுகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்'**

குன்னூர் : மருத்துவ குணம் வாய்ந்த அரிய வகை செடி, பழங்களை பாதுகாக்க விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

குன்னுாரில் உள்ள, நீலகிரி மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில், பழக்கண்காட்சியில் பங்கேற்கும் போட்டியாளர்களுக்கான கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் முனைவர் ராம்சுந்தர் தலைமை வகித்தார். கோபி எனும் போட்டியாளர் பேசுகையில், "நீலகிரியில் விளையும் பப்பினோ, லிச்சி, ரம்புட்டான், துரியன் உள்ளிட்ட மருத்துவ குணம் வாய்ந்த பழங்களை அதிகமாக வளர்க்க, விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நாற்றுக்களை வழங்க வேண்டும். பழத்தோட்டங்களை பாதுகாக்க வனத்துறை சோலார் வேலி அமைக்க முன்வர வேண்டும்," என்றார்.ஈஸ்வர் என்பவர் பேசுகையில், "நீலகிரியில் பேரி, பீச், பிளம்ஸ் போன்றவை காய்க்க, ஓராண்டு வரை காத்திருக்க வேண்டியுள்ளது. குருவி, வவ்வால், அணில், குரங்குகளால் பாதிப்புகள் ஏற்பட்ட போதும் விளைவிக்கி றோம். விக்கி, நாகா, அத்தி, குரங்கு பழம், காட்டு நெல்லி, விலாம்பழம், கொடுக்கா உட்பட பல்வேறு அரியவகை பழங்கள் அழியும் தருவாயில் உள்ளன. இவற்றை பாதுகாப்பதுடன், நாற்று உற்பத்தியையும் அதிகரித்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். வாழைப்பழம், சீதா, கொய்யா போன்ற பழங்களையும், உள்ளூர் அரிய வகை பழங்களையும் போட்டிகளில் வைக்கிறோம். பரிசுத்தொகை குறைவாக உள்ளதால், போட்டியாளர்கள் விரக்தியடைகின்றனர்," என்றார்.

முனைவர் ராம்சுந்தர் பேசுகையில், "குன்னுார் பழப்பண்ணையில் விவசாயிகள் நாற்றுகளை முறையாக வாங்கி பயன் பெறலாம். சோலார் வேலி அமைக்க, விவசாயிகள் கூட்டாக வனத்துறைக்கு தெரிவிக்கலாம்.

பரிசுத்தொகையை உயர்த்துவது குறித்து, மேலிடத்திற்கு தெரிவிக்கப்படும்," என்றார்.

நீலகிரி மாவட்ட வேளாண் பொறியியல் கூட்டுறவு சங்க தலைவர் முத்து, சிம்ஸ் பூங்கா மேலாளர் மூர்த்தி முன்னிலை வகித்தனர்.

**மே இறுதிவரை தேங்காய், கொப்பரைக்கு விலை கிடைக்கும்**

திண்டுக்கல் : "வருகின்ற மே மாத இறுதிக்குள் தேங்காய், கொப்பரையை விற்றுவிட வேண்டும்' என கொப்பரை விவசாயிகளுக்கு வேளாண் வணிகத்துறை மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், தஞ்சை, திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், தேனி மாவட்டங்களில் தென்னை அதிகம் சாகுபடியாகிறது. அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய் டன் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரத்து 800க்கு விற்பனையாகிறது. 550 முதல் 600 கிராம் எடையுள்ள ஒரு தேங்காய் ரூ.16 முதல் ரூ.18 வரை விற்கப்படுகிறது.கொப்பரை விலை: கொப்பரை கிலோவிற்கு ரூ.98 முதல் ரூ.99 வரை விற்பனையாகிறது. கடந்த 15 ஆண்டு விற்பனை விபரங்களை, வேளாண் பல்கலை விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் ஆய்வு செய்தது. அதில், தேங்காய் ஏப்ரல், மே மாதங்களில் டன் ஒன்றுக்கு ரூ.31 ஆயிரத்து 500 வரை விற்பனையாகும். தேங்காய் ஒன்று ரூ.17 முதல் ரூ.19 வரை விலை கிடைக்கும்' என கணிக்கப்பட்டது. வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் செல்வராசு கூறுகையில், கொப்பரையின் விலை கிலோவுக்கு ரூ.100 வரை இருக்கும் என கணிக்கப்பட்டது. கர்நாடகா, கேரளாவிலிருந்து மே இறுதியில், தேங்காய், கொப்பரை வரத்து அதிகரிக்கும். விலையும் குறையும். எனவே மே இறுதிக்குள் தேங்காய் மற்றும் கொப்பரைகளை விவசாயிகள் விற்பது நல்லது, என்றார்.

**வைகை அணையின் நீர்மட்டம் உயர்கிறது; திறக்கப்படும் நீரின் அளவும் அதிகரிப்பு**

ஆண்டிபட்டி : கோடை மழையால் வைகை அணை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

நேற்று மாலை அணை நீர் மட்டம் 40 அடியை எட்டியது. அணையில் இருந்து திறக்கப்படும் குடிநீர் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்னும்

ஓரிரு நாட்களில் சித்திரை திருவிழா கள்ளழகர் எதிர்சேவைக்கு அணையில் தண்ணீர் திறக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சில வாரங்களாக பெரியாறு, வைகை அணை நீர் பிடிப்பு பகுதிகளில் கோடை மழை பெய்துவருகிறது. பெரியாறு அணையில் திறந்து விடப்படும் நீர் தொடர்ந்து வைகை அணைக்கு வருகிறது.

இந்நிலையில் போடி கொட்டக்குடி, தேனி முல்லை ஆறு வருஷநாடு மூலவைகை ஆறுகளில் இருந்து வைகை அணைக்கு ஓரளவு நீர் வரத்து ஏற்பட்டுள் ளது. இம்மாத துவக்கத்தில் 35 அடியாக இருந்த வைகை அணை நீர் மட்டம் மழையால் தொடர்ந்து உயர்ந்து நேற்று மாலை 4 மணிக்கு 40.42 அடியாக உயர்ந் தது. அணையின் மொத்த உயரம் 71 அடி. கடந்த ஆண்டு இதே நாளில் அணை நீர் மட்டம் 24 அடி மட்டுமே இருந்தது. நேற்று அணைக்கான நீர் வரத்து வினாடிக்கு 682 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி பகுதிகளுக்கான குடிநீரின் அளவு, வினாடிக்கு 40 கன அடியில் இருந்து 60 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மே 4 ல் மதுரை சித்திரை திருவிழாவில் கள்ளழகர் எதிர்சேவை நிகழ்ச்சி உள்ளது. இன்னும் ஓரிரு நாளில் அணை திறப்புக்கான சூழல் ஏற்பட்டுள்ளது. அரசு உத்தரவு கிடைத்ததும், அணையில் தண்ணீர் திறக்கப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கரும்பு சாகுபடியை தவிர்த்து சூரியாந்திக்கு மாறும் விவசாயிகள்**

போடி : போடி பகுதி விவசாயிகள் கரும்பு சாகுபடியினை கை விட்டு சூரியகாந்தி சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் வருமானம் எடுக்க 12 மாதம் காத்திருக்கவேண்டும். தவிர சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்வதில்லை. பணம் பட்டுவாடாவிற்கு கூடுதலாக மூன்று மாதம் தாமதம் ஆகிறது. தவிர அரசு நிர்ணயித்த விலையை வழங்குவதிலும் சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் தாமதம் செய்து கோர்ட்டில் வழக்கும் தொடர்ந்துள்ளன.சாகுபடி செய்த கரும்பையும் கொடுத்து விட்டு பணத்திற்கு அலைவதை விவசாயிகள் விரும்பவில்லை. இதனால் விவசாயிகள் குறுகிய கால பயிர்களுக்கு மாறி வருகின்றனர். குறிப்பாக மக்காச்சோளம், சூரியகாந்தி போன்ற

ரகங்களை சாகுபடி செய்து வருகின்றனர். போடி, காமராஜபுரம், மீனாட்சிபுரம், பத்திரகாளிபுரம் உட்பட பல பகுதிகளில் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் அதனை மாற்றி விட்டு, குறுகிய கால சாகுபடி பயிருக்கு மாறி உள்ளனர்.

**சர்வதேச காற்றாலை கண்காட்சி; கோவையில் ஜூன் 21ல் துவக்கம்**

கோவை : சர்வதேச காற்றாலை மின்சக்தி உற்பத்தியாளர்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு, கோவையில் ஜூன் 21ல் துவங்கி மூன்று நாட்கள் நடக்கிறது.இது குறித்து, இந்திய காற்றாலை மின்சக்தி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் கஸ்துாரி ரங்கையன் கூறியதாவது:நான்காவது சர்வதேச காற்றாலை மின்சக்தி உற்பத்தியாளர்கள் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு கோவை, 'கொடிசியா' வர்த்தக கண்காட்சி வளாகத்தில் ஜூன், 21ல் துவங்கி மூன்று நாட்கள் நடத்தப்படுகிறது.தேசிய அளவில், 20 சதவீத மின் உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் கிடைக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் மற்றும் எரிசக்தி அமைச்சகம் நிர்ணயித்துள்ள இலக்கான, 60 ஜிஹா வாட் சக்தியை, 2022க்குள் அடைவது குறித்து கருத்தரங்கில் விவாதிக்கப்படும். காற்றாலை மின் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்தவும், முதலீட்டாளர்களை ஈர்க்கவும் இக்கருத்தரங்கு ஒரு வாய்ப்பாக அமையும். கருத்தரங்கு குறித்த விவரங்களுக்கு, http://www.mypadacademia.com/iwce2015 என்ற இணையதள முகவரியிலும், 044-4550 4036 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**கரூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணை அமைக்க பயனாளிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது**



கரூர் மாவட்டத்தில் கோழி வளர்ப்பு திட்டத்தின் மூலம் கோழிப்பண்ணை அமைக்க பயனாளிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.கலெக்டர் ஆய்வு

கரூர் மாவட்டம், மணல்மேடு ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் புறக்கடை கோழி வளர்ப்பு திட்டத்தின் மூலம் கோழி வளர்க்கப்பட்டு வருவது மற்றும் கூலி நாயக்கனூர் பகுதியில் தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயனாளிகள் விவசாய நிலங்களில் மழைத்தூவன் கருவி மூலம் கால்நடைகளுக்கு தேவையான தீவனப்புல் வளர்த்து வருவதை கலெக்டர் ஜெயந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து செய்யப்பகவுண்டனூர் பகுதியில் கோழிப்பண்ணை அமைக்கப்பட்டு உள்ளதை பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கரூர் மாவட்டத்தில் 4 ஆண்டுகளில் கிராமப்புறங்களில் புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 442 பயனாளிகள் மற்றும் கறிக்கோழி, நாட்டுக்கோழி பண்ணை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 440 பயனாளிகள் என மொத்தம் 882 பேர் ரூ.3½ கோடியில் கோழிப்பண்ணை அமைத்து உள்ளனர். இத்திட்டத்தில் பயனாளிகளுக்கு 50 சதவீதம் மானியம்

வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி பொதுமக்களின் தேவையை உணர்ந்து மிக நல்ல முறையில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டால் அதிக அளவில் விற்பனை ஆவதுடன் தேவையான பொருளாதார முன்னேற்றமும் பெறலாம். பொருளாதார முன்னேற்றம்அதேபோல் கால்நடை வளர்ப்பிலும் போதிய லாபம் பெறலாம். இதேபோல் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கோ-3, கோ-4, ரக தீவனபுல் வளர்க்க அரசு மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் ரூ.2 கோடியில் ஆயிரத்து 711 ஏக்கர் நிலப்பரப்பில் 5 ஆயிரத்து 133 பயனாளிகள் தீவனப்புல் வளர்த்து வருகின்றனர். இதுமட்டுமின்றி கூலித் தொழிலாளிகள் மற்றும் வறுமையில் உள்ளோர் பொருளாதார முன்னேற்றம் பெற அரசு அறிவித்த திட்டமான விலையில்லா ஆடு வழங்கும் திட்டத்தில் 4 ஆண்டுகளில் 9 ஆயிரத்து 673 குடும்பங்களுக்கு 4 ஆடுகள் வீதம் ரூ.12 கோடியே 56 லட்சத்தில் 38 ஆயிரத்து 692 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டன. அவை 62 ஆயிரத்து 251 குட்டிகள் ஈன்றுள்ளன. இதன் மூலம் பயனாளிகளின் பொருளாதார முன்னேற்றம் அடைந்து உள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின்போது கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் டாக்டர் ராமநாதன், உதவி இயக்குநர் டாக்டர் குழந்தைச்சாமி, செய்தி மக்கள் தொடர்பு துறை அதிகாரி பாண்டி உள்பட அரசு துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**கோடை சீசனுக்கு தயாராகும் சிம்ஸ் பூங்கா**



கோடை சீசனை முன்னிட்டு குன்னூரில் உள்ள சிம்ஸ் பூங்காவை புனரமைக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு உள் ளனர். சிம்ஸ் பூங்காகுன்னூர் பகுதியில் சிறந்த சுற்றுலா தலமாக சிம்ஸ் பூங்கா விளங்கி வருகிறது. இந்த பூங்கா வில் ஆண்டுதோறும் மே மாதம் இறுதி வாரத்தில்

பழக்கண்காட்சி நடத்துவது வழக்கம். இதன்படி இந்த ஆண்டுக்கான பழக்கண்காட்சி மே மாதம் 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

இந்த பழக்கண்காட்சியை காண தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம், ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களை சேர்ந்தவர்கள் வரக்கூடும் என்ப தால் சிம்ஸ் பூங்காவை புனரமைக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் இரவு பகலாக ஈடுபட்டு வரு கிறார்கள். இதேபோல் குழந்தைகள் பூங்காவில் உள்ள விளையாட்டு உபகரணங்கள் சீரமைக்கப் பட்டு வர்ணம் பூசும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

மலர் தொட்டிகள்மலர் தொட்டிகளில் பூக்களை தரம் பிரித்து நடவு செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. முதல் சீசனுக்காக கடந்த ஜனவரி மாதம் நடவு செய்யப்பட்ட மலர்ச்செடிகளில் மலர்கள் பூக்க தொடங்கி உள்ளன. தற்போது குன்னூர் பகுதியில் மழை பெய்து சீதோஷ்ண நிலை ரம்மியமாக இருப்பதால் இதனை அனுபவிக்க நாள் தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குன்னூர் சிம்ஸ் பூங்கா மற்றும் இயற்கை காட்சி முனை களான லேம்ஸ்ராஸ், டால்பின் நோஸ்களுக்கு சென்று வருகிறார்கள். இதனால் இந்த ஆண்டு நடைபெறும் பழக்கண்காட்சியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவார்கள் என்று பூங்கா அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர்.

**பொள்ளாச்சி நகரில் 124 மி.மீ. மழை பதிவு பாதிக்கப்பட்ட இடங்களில் நகராட்சி தலைவர் ஆய்வு**



பொள்ளாச்சி நகரில் 124 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் நகராட்சி தலைவர் கிருஷ்ண குமார் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார்.

பலத்த மழை

பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில நாட்களாக மாலை நேரத்தில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் நேற்று

முன்தினம் மாலை 3.30 மணிக்கு பெய்ய தொடங்கிய மழை நள்ளிரவு வரை நீடித் தது. பலத்த மழை பெய்ததால் சாலைகள், சாக்கடை கால்வாய்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

இதன் காரணமாக தாழ் வான பகுதிகளில் தண்ணீர் புகுந்தது. ஒரு சில இடங்களில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. மேலும் மீன்கரை ரோடு, ராம்நகர் உள்பட பல்வேறு இடங்களில் உள்ள ரெயில்வே பாலத்துக்கு அடி யில் சேறும்-சகதியும் அடித்து வரப்பட்டு, தேங்கியது. இதனால் நேற்று காலை வாகன ஓட்டிகள், பொது மக்கள் கடும் சிரமம் அடைந்த னர்.சாக்கடை கால்வாய் இடிந்து விழுந்தது பொள்ளாச்சி நகரின் சாக்கடை கழிவுநீர் கிருஷ்ணா குளத்துக்கு பெரிய கால்வாய் வழியாக கொண்டு செல்லப் படுகிறது. இதன் ஒரு பகுதியாக நேரு நகரில் இருந்து சி.டி.சி. காலனி, ராம்நகர் வழியாக பெரிய கால்வாயை அடையும் வகையில் ரெயில்வே துறை மூலம் ரெயில் நிலையம் அருகில் சுமார் 356 மீட்டர் நீளத்துக்கு சாக்கடை கால் வாய் அமைக் கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் பெய்த பலத்த மழையினால் கால்வா யில் தண்ணீர் அளவுக்கு அதிகமாக ஓடியது. இதனால் நேற்று அதிகாலை நேரத்தில் இந்த சாக்கடை கால்வாயில் சுமார் 300 மீட்டர் நீளத்துக்கு ஒரு பகுதியின் சுவர் அப்படியே இடிந்து கால்வாய்க்குள் விழுந்தது. இது குறித்து அந்த பகுதி மக்கள் கூறும் போது, சாக்கடை கால்வாய் தரமின்றி அமைக்கப்பட்டதால் தான், ஒரு நாள் பெய்த கன மழைக்கு தாக்கு பிடிக்க முடியாமல் விழுந்து விட்டது. இதனால் தற்போது கழிவுநீர் தேங்கி நிற்கிறது. அந்த பகுதியில் கிணற்றுக்குள் கழிவுநீர் இறங்குவதால் கிணற்று நீரும் மாசடைந்து வருகிறது என்று கூறினார் கள்.

124 மி.மீ. மழை பதிவு நேற்று முன்தினம் மாலை முதல் நள்ளிரவு கனமழை பெய்ததால் பொள்ளாச்சி நகரில் மட்டும் அதிகபட்சமாக 124 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. மணக்கடவில் 53.8 மி.மீ. மழையும், குறைந்த பட்சமாக காடம்பாறை, உப்பாறில் 4 மி.மீ. மழையும் பதிவாகி இருந்தது.

இந்த நிலையில் பொள் ளாச்சி பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நகராட்சி தலைவர் கிருஷ்ண குமார், கமிஷனர் சுந்தராம் பாள் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார்கள். அப் போது மீன்கரை

ரோட்டில் உள்ள ரெயில்வே பாலத்துக்கு அடியில் சாக்கடை கால் வாயில் தண்ணீர் தேங்கி நின்ற துடன், அந்த பகுதியில் மண் சரிந்த தால் சேறும்-சகதியுமாக மாறியது. உடனே நகராட்சி தலைவர், கமிஷனர் ஆகியோர் பொக்லைன் எந்திரம் வர வழைத்து, பாலத்துக்கு அடியில் தண்ணீர் செல்லாத வகையில் சாக்கடை கால்வாயை அடைத்து, அதன் பாதையை திருப்பி விட்டனர். மேலும் அங்கு சேறும், சகதியுமாக மாறியிருந்த மண் பொக்லைன் எந்திரம் மூலம் அகற்றப்பட்டது.அதிகாரிகள்

மேலும் மழையினால் பாதிக்கப்பட்ட அண்ணா காலனி, கண்ணப்பநகர், ராம் நகர், சுந்தரம் லே-அவுட், மரப் பேட்டை, கோட்டூர் ரோடு, கிருஷ்ணசாமி லே-அவுட் உள்பட பல்வேறு இடங்களை யும் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார்கள். அப்போது நகர் நல அலுவலர் ராஜ்குமார், என்ஜினீயர் ராஜா மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

இது குறித்து நகராட்சி தலை வர் கிருஷ்ணகுமார் கூறியதா வது:-

பலத்த மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு நடத்தப்பட்டு, மீட்பு பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. 3 பொக்லைன் எந்திரங்கள், 3 டிப்பர் லாரிகள் ஆகியவை பணியில் ஈடுபடுத் தப்பட்டுள்ளன. குடிசைகளில் வசிக்கும் மக்களுக்கு குடிசை மாற்று வாரியம் மூலம் அவர்களுக்கு கான்கிரீட்டால் ஆன வீடுகள் கட்டி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீன்கரை ரோட்டில் ரெயில்வே பாலம் அருகில் தடுப்புச்சுவர் இல்லாததால் மழையினால் தண்ணீர் பெருக் கெடுத்து ஓடும் போது மண் சரிந்து விடுகிறது. இதனால் பாலத்துக்கு அடியில் சேறும்-சகதியுமாக மாறி விடுகிறது. இங்கு தடுப்புச்சுவர் கட்ட ரெயில்வே துறை மூலம் நடவடிக்கை எடுக்க வலியுறுத் தப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

**கேசர்குளி அல்லா அணைக்கு தண்ணீர் கொண்டு வர பெட்டமுகிலாளம் பள்ளம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை-புதிய கால்வாய் அமைக்கும் பணி கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்**



கேசர்குளி அல்லா அணைக்கு தண்ணீர் கொண்டு வர பெட்ட முகிலாளம் பள்ளம் ஆற்றின் குறுக்கே தடுப் பணை- புதிய கால் வாய் அமைக்கும் பணியை கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்.

தடுப்பணைதர்மபுரி மாவட்டம் பாலக் கோடு அருகே உள்ள கேசர் குளிஅல்லா அணையின் பாசன வசதியை அதிகரிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து இருந்தனர். இதை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டை வட்டம் பெட்ட முகிலாளம் பள்ளம் ஆற்றில் இருந்து தடுப்பணை கட்டி, அங்கிருந்து கால்வாய் மூலம் சேகர்குளி அல்லா அணைக்கு தண்ணீர் கொண்டு வர நட வடிக்கை மேற்கொள்ளப் பட் டது.இது தொடர்பாக நபார்டு வங்கி உதவியுடன் இந்த திட் டத்தை செயல்படுத்த ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்து அதற் காக ஆணையை தமிழக அரசு வெளியிட்டது. அதன்படி 25 மீட்டர் நீளத்திற்கு தடுப்பணை கட்டி, 160 மீட்டர் நீளத்திற்கு நீர்வழங்கு கால்வாய் வெட்டு வதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டது. இந்த புதிய தடுப்பணை மற்றும் புதிய கால்வாய் அமைக்கும் பணிக் கான பூமி பூஜை நேற்று நடை பெற்றது.குறைவான மழைஇந்த பணியை கே.பி.அன்பழ கன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கலெக்டர் விவேகானந்தன் பூமி பூஜையை தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் நாகராஜன், ஒன்றியக்குழு தலைவர் கருணாகரன், தாசில் தார் தமிழரசன், கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் ரங்கநாதன் மற்றும் கூட்டுறவு சங்க தலைவர்கள் சரவணன், சுப்பிரமணி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர் குமார் உள்பட பலர் கலந்து கொண்ட னர்.அப்போது கலெக்டர் கூறு கையில், சேகர்குளி அல்லா அணையின் நீர்ப் பிடிப்பு பகுதியில் கடந்த பல ஆண்டு களாக குறைவான மழை பெய் தது. இதன் காரணமாக அணைக்கு வரும் நீர் வரத்து குறைந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவற்றை சரி செய்யும் பொருட்டு இந்த தடுப்பணை மற்றும் கால்வாய் வெட்டி உபரி நீர் கொண்டு வருவதன் மூலம் கூடுதல் தண்ணீர் வந்து சேரும். இதன் மூலம் கிடைக்க பெறும் கூடுதல் நீரை கொண்டு கேசர்குளி அல்லா அணையின் ஆயக்கட்டு தரப் பான 4 ஆயிரம் ஏக்கர் நிலங் களின் தண்ணீர் தேவையை ஈடுசெய்யலாம் என்று கலெக் டர் விவேகானந்தன் கூறி னார்.

**திருவாரூர் மாவட்டத்தில் 4-வது நாளாக மழை நன்னிலத்தில் அதிகபட்சமாக 15 மி.மீட்டர் பதிவானது**

திருவாரூர் மாவட்ட பகுதியில் 4-வது நாளாக பரவலாக மழை பெய்தது. நன்னிலத்தில்அதிக பட்சமாக 15 மி.மீட்டர் பதிவானது. கோடை வெயில் வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு கோடை வெயில் மார்ச் மாதத்திலேயே வாட்டி வதைக்க தொடங்கி விட்டது. இதனால் அக்னி வெயிலை சமாளிக்க முடியுமா? என்ற அச்சத்தில் பொதுமக்கள் இருந்தனர். இந்த நிலையில் மேலடுக்கு சுழற்சி மற்றும் வெப்ப சலனம் காரணமாக தமிழகம் முழுவதும் மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் கடந்த சில நாட்களுக்கு முன்பு அறிவித்தது. அதன்படி திரு வாரூர் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முழு வதும் பலத்த மழை பெய்தது. இதைதொடர்ந்து ஒவ்வொரு நாளும் மாவட்டத்தில் ஆங் காங்கே சாரல் மழை பெய்தது வந்தது. இதனால் மாவட் டத்தில் வெயில் அளவு குறைந் தது.

4-வது நாளாக மழை

இந்த நிலையில் நேற்று தொடர்ந்து 4-வது நாளாக திருவாரூர் மாவட்ட பகுதி களில் பரவலாக மழை பெய் தது. திருவாரூரில் நேற்று வெயிலே இல்லை. காலை 8 மணி அளவில் பலத்த மழை பெய்தது. அதைதொடர்ந்து வானம் விட்டு விட்டு தூறியது. இதேபோல மாவட்டம் முழு வதும் பரவலாக மழை பெய்தது.

நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி நன்னிலத்தில் அதிகபட்சமாக 15 மில்லி மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தின் மற்ற இடங் களில் பதிவான மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்) வருமாறு:-

மன்னார்குடி-14, திருத் துறைப்பூண்டி-4, முத்துப் பேட்டை -3, நீடா மங்கலம்-1. மாவட்டம் முழுவதும் மொத்தம் 37 மில்லி மீட்டர் மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத் தின் சராசரி மழை அளவு 4 மில்லி மீட்டர் ஆகும்.

பருத்தி வயலில் தண்ணீர்

கடந்த 4 நாட்களாக தொடர்ந்து மழை பெய்ததால் பருத்தி வயல்களில் தண்ணீர் தேங்கி உள்ளது. இதனால் பருத்தி சாகுபடி செய்த விவ சாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

## கிணறுகளில் நீர்மட்டம் உயர்வு

சின்னசேலம், : கள்ளக்குறிச்சி அருகே உள்ள வடக்கநந்தல் பேரூராட்சியில் கச்சிராயபாளையம், அக்கராயபாளையம், மேட்டுப்பாளையம், வடக்கநந்தல், வெங்கட்டம்மாபேட்டை, கோமுகி அணை குடியிருப்பு, அம்மாபேட்டை ஆகிய பகுதிகள் உள்ளது. இதில் அம்மாபேட்டையை தவிர மற்ற பகுதிகள் அனைத்திற்கும் கோமுகி ஆற்று பகுதிகளில் இருந்துதான் பேரூராட்சி நிர்வாகத்தால் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வடக்கநந்தல் பேரூராட்சியை பொறுத்தவரை கடந்த சில ஆண்டுகளாகவே கோடை காலத்தில் தண்ணீர் பஞ்சம் ஏற்படுவது வழக்கம். ஏனெனில் அப்போதெல்லாம் கோமுகி ஆற்றில் தண்ணீர் வற்றிவிடும். இந்த ஆண்டுகூட கடும் தண்ணீர் பஞ்சம் ஏற்படும் என்று பொதுமக்கள் கருதினார்கள். ஆனால் கல்வராயன்மலை பகுதியில் கடந்த 10 நாட்களாகவே இரவு நேரங்களில் நல்ல மழை பெய்து வருகிறது. இதன்மூலம் கோமுகி அணையின் நீர்மட்டம் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு கோடையில் உயர்ந்துள்ளது. அதனால் கோமுகி ஆற்றிலும் தற்போது தண்ணீர் உள்ளது. வடக்கநந்தல் பேருராட்சிக்கு குடிநீர் சப்ளை செய்யப்படும் கிணறுகள் பெரும்பாலும் ஆற்றங்கரையோரம்தான் உள்ளது. அதனால் குடிநீர் கிணறுகளில் தற்போது நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதனால் இந்த ஆண்டு வடக்கநந்தல் பேரூராட்சி கிராமங்களில் குடிநீர் பஞ்சம் தீர்ந்துள்ளது என்று பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## திருச்சி மாவட்டத்தில் 2.15லட்சம் ஏக்கரில் பயறு சாகுபடி 25,000 ஏக்கரில் உளுந்து விதைப்பு

திருச்சி,: திருச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை முடிந்த பகுதிகளில் 2.15 லட்சம் ஏக்கரில் சோளம், துவரை, நிலக்கடலை உள்ளிட்ட பயறுகள்

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. உளுந்து மட்டும் 25 ஆயிரம் ஏக்கரில் விதைக்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை முடிந்த பகுதிகளில் சிறுதானியங்களான சோளம் 91,113 ஏக்கரிலும், மக்காச்சோளம் 27,083 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளது. பயறுவகை பயிரான துவரை 9440 ஏக்கரிலும், நிலக்கடலை 20,768 ஏக்கரிலும், பருத்தி 41958 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளது. டெல்டா பகுதியில் நெல் அறுவடை முடிந்த பகுதிகளில் நஞ்சை தரிசு உளுந்து 25,000 ஏக்கர் வரை விதைக்கப்பட்டுள்ளது.விதை கிராம திட்டத்தின் கீழ், 50சதவீத மான்யத்தில் சான்று விதைகள் விநியோகத்தில் இதுவரை நெல் விதைகள் 317 மெ.டன்களும், எண்ணெய் வித்து பயிர்கள் 88 மெ.டன்களும் விவசாயிகளுக்கு 50 சதவீத மான்யத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல் விதைகள் 154 மெ.டன்கள் கிலோவிற்கு ரூ.10வீதம் மான்யத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு இயக்க திட்ட த்தில் சிறுதானிய பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க 5ஆயிரம் மான்யத்தில் 800 செயல் விளக்க திடல்கள் அமைத்திட இலக்கீடு பெறப்பட்டு இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை முடிந்த பகுதிகளில் 2,15,362 லட்சம் ஏக்கரில் சோளம், மக்காச்சோளம், துவரை, நிலக்கடலை உள்ளிட்ட பயறுகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் உளுந்து மட்டும் 25ஆயிரம் ஏக்கரில் விதைக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு இயக்க மற்றும் தேசிய எண்ணெய் வித்து பெருக்க திட்டத்தில் மான்ய விலையில் விசை தெளிப்பான், கைத்தெளிப்பான், சுழற் கோப்பை, பாசனநீர் கொண்டு செல்லும் குழாய்கள், மழைத்தூவான், தெளிப்பு நீர்பாசன கருவிகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், களைக்கொல்லி மற்றும் உயிர் உரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. நீடித்த நிலையான கரும்பு சாகுபடி அமைக்க 79எக்டரில் மான்ய விலையில் சொட்டு நீர்பாசன கருவிகள் அமைக்கப்பட்டு வருகிறது என்றார்.சராசரியை தாண்டியது மழைதிருச்சி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 762 மி.மீ. ஏப்ரல் மாதம் முடிய பெய்ய வேண்டிய சராசரி மழை அளவு 72.40 மி.மீ. இதுவரை

பெறப்பட்ட மழை அளவு 83.12 மி.மீ. இம்மாதம் 5.13 மி.மீ மழை பெய்துள்ளது. சராசரி மழையை விட சற்று கூடுதலாக மழை பெய்துள்ளது.உரங்கள் கையிருப்பு...வு திருச்சி மாவட்டத்தில் நடப்பு பருவத்திற்கு தேவையான உரங்கள் யூரியா 3144 மெ.டன்னும், டிஏபி 3198 மெ.டன்னும், பொட்டாஷ் 2830 மெ.டன்னும் மற்றும் கூட்டுரம் 5996 மெ.டன்னும் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுவு வங்கி மற்றும் தனியார் உரக் கடை களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

**நீராதாரப்பகுதியில் கனமழை அமராவதி அணை நீர்மட்டம் உயர்கிறது**

உடுமலை, : நீராதார பகுதியில் கனமழை பெய்து வருவதால் அமராவதி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நீர்மட்டம் உயர்வதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். உடுமலை அருகே உள்ளது அமராவதி அணை. இதன் உதவியால் திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் பகுதியில் 3500 ஏக்கர் நிலம் நேரடி பாசனம் பெறுகிறது. பழைய, புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு மாறி,மாறி தண்ணீர் திறக்கப்பட்டதால் அணையின் நீர்மட்டம் குறைந்தது. கடந்த சில நாட்களுக்கு முன் 90 அடி நீர்மட்டம் கொண்ட அணையில் 33 அடிக்கு தண்ணீர் இருந்தது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக உடுமலை பகுதியில் நல்ல மழை பெய்து வருகிறது. அணையின் நீராதாரப்பகுதியான கேரள மலைப்பகுதியிலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. தற்போது வினாடிக்கு 278 கனஅடி தண்ணீர் வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. தற்போது அணையில் 37.21 அடி தண்ணீர் உள்ளது. அணை நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பொன்னமராவதியில் மண்வளத்தை காக்க இயற்கை விவசாயத்திற்கு திரும்புங்கள்**

அன்னவாசல், : மண்வளத்தை காக்க இயற்கை விவசாயத்திற்கு திரும்புங்கள் என்று மண்வள பாதுகாப்பு கருத்தரங்கில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அன்னவாசல் அருகே உள்ள அகரப்பட்டியில சூழலியல் உரிமைக்கான இளையோர் கூட்டமைப்பு சார்பில் மண்வளப்பாதுகாப்பு

கருத்தரங்கம் நடைபெற்றது. இயற்கை விவசாயி முத்தையா தலைமை வகித்தார். தமிழ்நாடு உழவர் தொழில்நுட்ப கழக பாமயன் கருத்துரை வழங்கினார். அப்போது, உணவு என்பது நிலமும், நீரும் ஆகும், நிலத்தில் உள்ள சத்தே உணவாக மாற்றப்படுகிறது. நிலம் என்பது நம் பிள்ளைகளிடமிருந்து நாம் வாங்கியிருக்கும் கடன் என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும். மண்வளமானது ரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், பிளாஸ்டிக் கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள் ஆகியவற்றால் நாளுக்கு நாள் பாதிப்படைந்தே வருகிறது. இதனால் மனிதனுடைய உடல்வளமும் பாதிக்கப்பட்டு, தீராத பல்வேறு நோய்களுக்கு உள்ளாகிறார்கள் என்றார்.இளையோர் அமைப்பின் மாநில பொறுப்பாளர் விஜோ பேசுகையில், 13 மாநிலங்களில் செயல்படும் இளையோர் அமைப்பானது. சுற்றுச்சூழல் தொடர்பான பயிற்சிகளில் கலந்து கொண்டு, அந்தந்த பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் பிரச்னைகளை, மக்களின் பங்கேற்புடன் பிரசாரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, மரக்கன்றுகள் நடுதல், பிளாஸ்டிக் ஒழிப்பு, குளங்கள் சுத்தம் செய்தல், இயற்கை விவசாய பயிற்சிகள் கொடுத்தல், வீட்டுத்தோட்டங்கள் உருவாக்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்றார். மண் வளத்தை காக்க இயற்கை விவசாயத்திற்கு திரும்ப வேண்டும் என்று கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. இயற்கை மருத்துவர் சித்தர், இளையோர் அமைப்பை சார்ந்த கரூர் மாரியப்பன் மற்றும் கன்னியாகுமரி சஜனா ஆகியோர் கருத்துரை வழங்கினர். கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகளுக்கு பல்வேறு மரக்கன்றுகள் கொடுக்கப்பட்டு, சிறுதானிய உணவும் வழங்கப்பட்டது. செய்முறை விளக்கமாக அசோலா தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், பஞ்சகவ்யம் தயாரித்தல், மூலிகை பூச்சிவிரட்டி தயாரித்தல் உள்ளிட்டவை செய்து காண்பிக்கப்பட்டது. கருத்தரங்கில் புதுக்கோட்டை, கரூர், திருப்பூர், கன்னியாகுமரி, நாகர்கோவில் போன்ற பல்வேறு மாவட்டங்களை சார்ந்த இளையோர்கள் மற்றும் விவசாயிகள், இயற்கை ஆர்வலர்கள் கரூர் கிருஸ்துராஜ், பெங்களூர் சிந்தியா, புதுக்கோட்டை மகேந்திரன், ராமதாஸ், ஜீவானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக

ரோஸ் நிறுவன இயக்குநர் வரவேற்றார், முடிவில் அகிலா நன்றி கூறினார்.

**பசுந்தேயிலைக்கு விலை பகிர்வு திட்டம் தேயிலை வாரியம் அமலாக்க கோரிக்கை:**

குன்னூர்,: பசுந்தேயிலைக்கு விலை பகிர்வு திட்டத்தை அமல்படுத்த தேயிலை வாரியம் முன்வர வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.நீலகிரி மாவட்டத்தில் 63 ஆயிரம் சிறு, குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். 100க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. இம்மாவட்டத்தின் பொருளாதாரத்தின் முக்கிய பங்காக தேயிலை தொழில் தான் விளங்கி வருகிறது. இதில் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென உத்தரவிட்டார். அதன்பேரில் தேயிலை வாரியம் பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்வதற்காக கண்காணிப்பு குழுவை அமைத்தது. இக்குழு மாவட்டம் முழுவதும் சிறு தேயிலை விவசாயிகள், உற்பத்தியாளர்கள், ஏல மைய வர்த்தகர்கள், இடைத்தரகர்கள் உள்ளிட்டோரிடம் கருத்து கேட்டது. பிறகு இக்குழுவினர் அறிக்கையை தேயிலை வாரியத்திடம் ஒப்படைத்தனர். அதன்படி, தேயிலை வாரியம் சார்பில் பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் தொடர்பான உத்தரவை செயல் இயக்குநர் அம்பலவாணன், நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து தேயிலை தொழிற்சாலைகளுக்கும், அனுப்பி வைத்துள்ளார். இதனை தொடர்ந்து விலை நிர்ணயம் செய்வதில் குளறுபடி ஏற்பட்டுள்ளதாக கூறி தொழிற்சாலை உரிமையாளர்கள் சார்பில் நீதிமன்றத்தின் மூலமாக தடை உத்தரவை பெற்றுள்ளனர். இதனால் தேயிலை வாரியத்தின் சார்பில் பசுந்தேயிலைக்கு உண்டான விலையை நிர்ணயம் செய்ய இயலவில்லை. இது தொடர்பான அறிக்கையை தேயிலை வாரியம் சார்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு விலைப்பகிர்வு திட்டம் அமல்படுத்தப்பட்டது. ஆனால் இதனை பெரும்பாலான தொழிற்சாலை, உரிமையாளர்கள் பின்பற்றாததால் இன்று வரை பசுந்தேயிலைக்கு உண்டான விலை

முரண் பாடாகவே வழங்கப்படுவதாக விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர். எனவே தற்போது தேயிலை வரத்து குறைந்து வரும் நிலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நியாயமான விலையை உற்பத்தியாளர்கள் கொடுக்கும் வகையில் தேயிலை வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**விவசாயிகளுக்கான மூன்று நாள் பயிற்சி**

ஊட்டி, : பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் குன்னூரில் உள்ள உபாசி அரங்கில் நடந்தது. தோட்டக்கலை உதவி இயக்குநர் ராம்சுந்தர், உபாசி வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் ராமமூர்த்தி ஆகியோர் துவக்கி வைத்தனர். இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக உதவி தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராஜா, வேளாண்மை வணிகம் மற்றும் விற்பனைத்துறை வேளாண்மை அலுவலர் ரமேஷ், மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி ராஜன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் 20 குழுக்களை சேர்ந்த 368 விவசாயிகள் பயன்பெற்றனர்.இரண்டாம் நாள் பயிற்சியில் முத்தோரை பாலாடா மத்திய உருளைகிழங்கு ஆராய்ச்சி நிலைய தலைவர் வெங்கடாச்சலம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் மாலதி, வேளாண் அலுவலர் ரமேஷ் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தை சேர்ந்த சண்முகம், உதவி பொறியாளர் பிரபு ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் 21 விவசாயிகள் பயன்பெற்றனர். நிறைவு நாள் பயிற்சியில் 383 விவசாயிகள் பயன்பெற்றனர். இதில் பங்கேற்ற விவசாயிகளுக்கு பயிற்சி கையேடுகள், சான்றிதழ்கள் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

**வான்கோழி, வாத்து கூண்டில் அடைத்து விற்பனை**

பெரம்பலூர்,: குரும்பலூரில் வான்கோழி, வாத்து, நாட்டுக்கோழிகள் கூண்டில் அடைத்து விற்பனைசெய்யப்படுகிறது. பிராய்லர் கோழிகளால் உடலுக்குத் தீங்கு ஏற்படுவதாக மருத்துவரீதியாக கூறப்பட்டு வருவதால் பொதுமக்கள் பலரும் அவற்றை அதிகம் உண்பதைத் தவிர்த்து வருகின்றனர். இதனால் நாட்டுக் கோழிகளுக்கான மவுசு அதிகரித்துள்ளது. இதனை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டுள்ள திட்டக்குடி வியாபாரிகள் கிராமம் கிராமமாக நாட்டுக்கோழி ரகங்களை கூடைகளில் கொண்டுவந்து கூண்டுஅமைத்து விற்பனை செய்து

வருகின்றனர். இதில் வான்கோழி, கினிகோழி, வாத்து, நாட்டுக்கோழி, போந்தாகோழி ஆகிய பல்வேறு ரகங்களை விற்கின்றனர். இதற்காக அனைத்திலும் குஞ்சுகளைக் கொண்டு வந்து ஜோடி ரூ100க்கும், ரூ150க்கும் விற்பனை செய்கின்றனர். உடலுக்கு சத்து நிறைந்தது, கைகால், மூட்டு, உடல் வலிக்கு சிறந்த நிவாரணி எனக்கூறி விற்பதால் இதற்கான விற்பனை விறுவிறுப்டைந்துள்ளது.